


**03. 01. 2026**

தலைப்புச் செய்திகள்

1. சென்னையில் 9ஆவது சித்தா மருத்துவ கொண்டாட்டங்களை குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் இன்றுமாலை துவக்கிவைக்கிறார்.

2. புத்த பெருமானின் கலாச்சார மரபுகளை முன்னெடுத்து செல்லும் கருவியாக நம் நாடு திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

3. தமிழக அரசு ஊழியர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை செயல்படுத்த முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் ஆணை பிறப்பித்துள்ளார்.

4. வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த இரண்டு நாள் முகாமில் ஏராளமான வாக்காளர்கள் விண்ணப்பித்து வருகின்றனர்.

5. அஹமதாபாத்தில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் மகளிர் ஒற்றையர் இறுதி ஆட்டத்திற்கு Vaidehi Chaudhari முன்னேறியுள்ளார்.

இனி விரிவான செய்திகள்

*************

சி.பி. ராதாகிருஷ்ணன்

சென்னையில் 9ஆவது சித்தா மருத்துவ முறை கொண்டாட்டங்களை குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் இன்றுமாலை துவக்கிவைக்கிறார்.

மத்திய ஆயுஷ் அமைச்சர் திரு.பிரதாப் ராவ் ஜாதவ் இதில் பங்கேற்கிறார்.

ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய சித்த மருத்துவ நிறுவனமும் மத்திய சித்தா ஆராய்ச்சி குழுவும் இணைந்து இவ்விழாவிற்கு ஏற்பாடுகள் செய்துள்ளன.

நம் நாட்டின் பாரம்பரிய மருத்துவ முறையான சித்தா மற்றும் அது சார்ந்த கிளைகளின் முக்கியத்துவம் குறித்து இதில் எடுத்துரைக்கப்படுவதோடு மக்களிடையே இம்மருத்துவ முறைகளை கொண்டு செல்வதற்கான நடைமுறைகள் குறித்தும்விவாதிக்கப்படும்.

முன்னதாக வேலூர் ஸ்ரீபுரம் பொற்கோவில் பீடாதிபதியின் 50ஆவது பிறந்த நாள் விழாவில் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் மத்திய அமைச்சர் டாக்டர் எல்.முருகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

குடியரசு துணை தலைவரின் வருகையை ஒட்டி வேலூர் நகரத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

*************

பிரதமர்

புத்த பெருமானின் கலாச்சார மரபுகளை பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல் அவற்றை முன்னெடுத்து செல்லும் கருவியாக

நம் நாடு திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

புத்தரின் நினைவுச்சின்னங்களை உள்ளடக்கிய கண்காட்சியை இன்று புதுதில்லியில் தொடங்கிவைத்து பேசிய அவர், குஜராத்தில் கண்டெடுக்கப்பட்ட ஆயிரக்கணக்கான புத்தரின் நினைவு பொருட்களையும், சின்னங்களையும் மத்திய அரசு உயர் முன்னுரிமையுடன் பாதுகாத்து வருவதாக சுட்டிக்காட்டினார்.

வருங்கால தலைமுறையினர் புத்தர் குறித்த அனைத்து அம்சங்களையும் தெரிந்துகொள்ளும் வகையில் அவர்சார்ந்த நினைவிடங்கள் நவீனமயமாக்கப்பட்டு சுற்றுலா பயணிகளும் யாத்திரிகர்களும் பார்வையிட முழுவீச்சில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறினார்.

புத்தர் தொடர்புடைய பாலி மொழியையும் மக்களிடையே கொண்டு செல்லும் மத்திய அரசின் முயற்சியாக அதற்கு செம்மொழி அந்தஸ்து வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

*************

பிரதமர்

……… . MUSIC……

நாட்டின் வளர்ச்சி பாதையில் அரசின் கொள்கைகள் ஆக்கப்பூர்வமான மாற்றங்களுடன் சீர்திருத்தங்களின் ஆண்டாக 2025-ம் ஆண்டு மேம்பட்ட நிலையில், நிதி துறையின் மேம்பாடு குறித்த சிறப்பு செய்தி தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

……… . MUSIC……

நாட்டின் நிதித்துறை சென்ற ஆண்டு உலகளாவிய அங்கீகாரத்துடன் புத்தாக்கம், படைப்பாற்றல் திறன், தொழில்நுட்பம், சமத்துவம், போன்ற பிரிவுகளில் சர்வதேச அங்கீகாரத்தை பெற்ற நிலையில் 25.5 சதவிகித சொத்து வள வேறுபாடு குறியீட்டுடன் உள்ள இந்தியாவை, சீனா, அமெரிக்கா ஜி-7 மற்றும் ஜி-20 நாடுகளின் முன்னோடியாக உலக வங்கி நிறுத்தியது குறிப்பிடத்தக்கது.

2015-ம் ஆண்டில் நாட்டின் சமூக பாதுகாப்பு திட்டத்தின் பயனாளிகள் 19 சதவிகிதமாக இருந்த நிலையில் சென்ற ஆண்டு இது 64.3 சதவிகித வளர்ச்சியை எட்டியுள்ளதாக சர்வதேச தொழிலாளர் நல அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

நம் நாட்டின் மின்னணு பொது கட்டமைப்பு சர்வதேச அளவில் பாராட்டுகளை பெற்ற நிலையில், UPI பண பரிவர்த்தனையை சர்வதேச நிதியம் உலகின் சிறந்த பண பரிமாற்ற முறையாக அங்கீகரித்தது மாபெரும் சாதனையாகும்.

இந்தியாவின் அறிவாற்றல் திறனால், அறிவுசார் பொருளாதார நாடாக உலக அறிவுவள மையம் நம் தேசத்தை நிலைநிறுத்தியுள்ளது.

நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் 17 கோடிக்கும் அதிகமான மக்கள் வறுமையிலிருந்து மீட்கப்பட்டது மத்திய அரசின் மிகப்பெரிய சாதனையாக கருதப்படுகிறது.

இந்தியாவின் கலாச்சாரம், புத்தாக்க திறன்கள் மேம்பட்டதோடு சர்வதேச புத்தாக்க குறியீட்டில் இந்தியா 38ஆவது இடத்திற்கு முன்னேறி யுனஸ்கோவின் அங்கீகாரத்தை வென்று உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது.

நிதி சார்ந்த உற்பத்தி மேம்பட்டது குறித்து இந்திய தொழிற் கூட்டமைப்பின் திருச்சி மண்டல தலைவர் திரு.அஜய்ஜெயராஜ் எடுத்துரைக்கையில்

வாய்ஸ்

………..Music………

*************

வேலுநாச்சியார்

வீரமங்கை வேலுநாச்சியாரின் 296ஆவது பிறந்த நாள் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் வெளியிட்ட செய்தியில் காலனி ஆதிக்கத்திற்கு எதிராக வீர தீரத்துடன் போராடிய அன்னாரது தேசபற்று மற்றும் தன்னலமற்ற தியாகத்தை நாடு என்றென்றும் நினைவு கூறுவதாக குறிப்பிட்டுள்ளார்.

வீரமங்கை வேலுநாச்சியார் மற்றும் வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி முதலமைச்சர் வெளியிட்ட சமூகவலைதள பதிவில் இந்திய நாட்டின் விடுதலைக்காக முன்னோடிகளாக போராடிய அவர்தம் பெருமையை அரசு தொடர்ந்து போற்றிவருவதாக குறிப்பிட்டுள்ளார்.

சிவகங்கை மாவட்டம் சூரக்குளம் பகுதியிலுள்ள ராணி வேலு நாச்சியாரின் மணி மண்டபத்தில் தமிழக அரசின் சார்பில் மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.பெரியகருப்பன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பொற்கொடி உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இதேபோல் வீரபாண்டிய கட்டபொம்மனின் 267வது பிறந்தநாளை முன்னிட்டு, தூத்துக்குடி கட்டபொம்மன் நகரிலுள்ள அன்னாரது திருவுருவ சிலைக்கு மாநில சமூகநலன் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.கீதாஜீவன் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

*************

முதலமைச்சர் ஓய்வூதியதிட்டம்

தமிழக அரசு ஊழியர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை செயல்படுத்த முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று ஆணை பிறப்பித்துள்ளார்.

இதன்படி மாநில அரசு ஊழியர்கள் பெறும் கடைசி மாத ஊதியத்தில் 50 சதவிகிதம் ஓய்வூதியமாக வழங்க வகை செய்யப்படுகிறது.

பணியாளர்களின் 10 சதவிகித பங்களிப்புடன் ஓய்வூதிய நிதியத்திற்கு தேவைப்படும் கூடுதல் நிதியை அரசு வழங்கும்.

6 மாதத்திற்கு ஒருமுறை அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படுவதற்கு இணையான அகவிலைப்படி உயர்வு,

ஓய்வூதியதாரர்கள் இறக்க நேரிட்டால் 60 சதவிகித குடும்ப ஓய்வூதியம்,

அரசு அலுவலர்கள், ஓய்வு பெறும்போதும், பணிக்காலத்தில் உயிரிழக்க நேரிடும்போதும் 25 லட்சத்திற்கு மிகாமல் பணிக்கொடை ஆகியவற்றையும் தமிழக அரசு இன்று அறிவித்துள்ளது..

புதிய உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம் செயல்படுத்தப்பட்ட பின்னர் ஓய்வூதியம்பெறுவதற்கான தகுதி,

பணிக்காலத்தை நிறைவு செய்யாமல் பணி ஓய்வு பெறுபவர்களுக்கு குறைந்தபட்ச ஓய்வூதியம், உள்ளிட்ட அம்சங்களும் இந்த புதிய அறிவிப்பில் இடம்பெற்றுள்ளன.

தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் 20 ஆண்டுகால கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் இந்த புதிய திட்டம் செயல்படுத்தப்படுவதாக முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

*************

முதலமைச்சர்

முன்னதாக சென்னை கோட்டூர்புரத்தில் நடைபெற்ற காவல்துறை சார்ந்த சார்ந்த நிகழ்ச்சியில் 621 காவல் சார்பு ஆய்வாளர்கள் மற்றும் 129 தீயணைப்பு நிலைய அதிகாரிகளுக்கு பணிநியமன ஆணைகளை இன்று வழங்கிப் பேசிய முதலமைச்சர், பெண் காவலர்களின் நலனை கருத்தில் கொண்டு சலுகைககள் வழங்கப்படுவதாக கூறினார்.

தமிழகத்தில் காவல்துறை காலிப்பணியிடங்கள் உடனுக்குடன் நிரப்பப்பட்டு வருவதாகவும் எடுத்துரைத்தார்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்ற சம்பவங்களில் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும் என்றும் அறிவுறுத்திய முதலமைச்சர் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளில் காவல்துறையினர் துடிப்புடன் செயலாற்றுமாறு கேட்டுக்கொண்டார்.

*************

ஆர்.என்.ரவி

தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி நீலகிரி மாவட்டம் முதுமலை யானைகள் முகாமை இன்று பார்வையிட்டார்.

நான்கு நாள் பயணமாக உதகை சென்றுள்ள அவர், பல்வேறு நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்கிறார்.

*************

ஜல்லி கட்டு

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பிரசித்திபெற்ற மதுரை அவனியாபுரம் ஜல்லிக்கட்டு வரும் 15ஆம் தேதி நடைபெற உள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

மாநில வணிகவரி பதிவுத்துறை அமைச்சர் திரு.மூர்த்தி தலைமையில் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் ஜல்லிக்கட்டு முன்னேற்பாட்டு பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டத்தில் இதற்கான முடிவு எட்டப்பட்டது,

வரும் 16ஆம் தேதி பாலமேடிலும், 17ஆம் தேதி அலங்காநல்லூரிலும் ஜல்லிக்கட்டு நடைபெற உள்ள நிலையில்

காளைகள் மற்றும் மாடுபிடி வீரர்களுக்கான மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இப்போட்டிகளை காண வரும் பொதுமக்களுக்கும், உரிய பாதுகாப்பு வழங்குவதற்கான வழிமுறைகள் குறித்து இதில் ஆலோசிக்கப்பட்டது.

இதனிடையே புதுக்கோட்டை மாவட்டம் தச்சங்குறிச்சியில் இந்தாண்டிற்கான முதல் ஜல்லிகட்டு போட்டிகள் இன்று நடைபெறுகின்றன.

300க்கும் மேற்பட்ட காளைகளை அடக்க 600 மாடுபிடி வீரர்கள் களத்தில் உள்ளனர்.

*************

வாக்காளர் பட்டியல்

தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் நீக்கம், முகவரி மாற்றம் உள்ளிட்ட திருத்தங்களை மேற்கொள்வதற்கான சிறப்பு முகாம் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் இன்றும், நாளையும், நடைபெறுகிறது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர பணிகளில் விடுபட்டவர்கள், ஜனவரி ஒன்றாம் தேதி 18 வயது பூர்த்தியடைந்தோரும் இதில் விண்ணப்பிக்கலாம்.

*************

நாகை – வாய்ஸ்

கோடியக்கரைக்கு தென்கிழக்கே மீன்பிடித்து கொண்டிருந்த 9 தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் இன்று கைது செய்யப்பட்டது அப்பகுதி

மீனவர்களிடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

……… . வாய்ஸ் ………

*************

திருவையாறு

சத்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 179-வது ஆராதனை விழா திருவையாறில் இன்றுமாலை தொடங்குகிறது.

முக்கிய நிகழ்வான பஞ்சரத்ன கீர்த்தனை வரும் புதன்கிழமை இசைக்கப்படும்.

*************

டென்னிஸ்

அஹமதாபாத்தில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் மகளிர் ஒற்றையர் இறுதிபோட்டிக்கு இந்தியாவின் Vaidehi Chaudhari முன்னேறியுள்ளார்.

அரையிறுதியில் ஜப்பானின் கவாமுராவை 6-4 6-4 என்ற நேர் செட்களில் அவர் வென்றார்.

*************

ஹாக்கி

ஹாக்கி இந்தியா லீக் போட்டிகள் சென்னையில் இன்று தொடங்குகின்றன.

முதல் போட்டியில் தமிழ்நாடு அணி ஹைதராபாத்தை எதிர்கொள்கிறது.

சென்னை, ராஞ்சி, புவனேஸ்வர் உள்ளிட்ட நகரங்களில் வரும் 26ஆம் தேதிவரை நடைபெறும் இப்போட்டிகளில் 8 அணிகள் பங்கேற்கின்றன.

*************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது